**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**

**OS No. 70/2016**

Deposition of witness for பி.வா.சா.1

Name and Age : மாரியப்பன்

Father's/Husband Name :

Village and Taluk :

Caste and Religion

:

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of (30.10.2025)

குறுக்கு விசாரணை

நான் வழக்கின் உரிமை கோரியுள்ளது மொத்த சொத்தில் பிராது 1வது தபசில் சொத்தின் கீழோரம் மத்தியில் என்றால் சரிதான். அந்த சொத்தானது எனது தாயார் வாய்மொழி பாகத்தில் கிடைத்ததாக கட்சி செய்து உள்ளார் என்றால் சரிதான். ஒன்னாவது பிரதிவாதியும், ஒன்னாவது வாதியும் உடன் பிறந்த அக்கா, தம்பி என்றால் சரிதான். அவர்கள் உடன் பிறந்தவர்கள் வெள்ள பாண்டி, முருகையா, கணபதி அம்மாள் லட்சுமி என்றால் சரிதான். வெள்ள பாண்டியும் முருகையாவும் எனக்கு மாமா வேண்டும். எங்களுக்கும் எனது மாமாக்களுக்கும் எந்த விரோதமும் கிடையாது என்றால் சரிதான். வாதி தரப்பு சான்றாவனம் வாசாஆ 9 ஆவணத்தில் எல் சிடி எம் அந்த சொத்து தான் எங்களுக்கு பாத்தியபட்டது சொத்து என கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். ஒன்றாம் தபசில் சுற்றி இருக்கு வட பக்கம் தெரு கிழமேல் தெரு என்றால் சரிதான். கீழ்புறம் தென்வடல் ரோடு உள்ளது. மேற்கு பக்கம் சீனி பாண்டி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது. அது வேறு சர்வே எண்ணில் உள்ளது தெற்கு பக்கத்தில் ஒண்ணாவது வாதி அவரது மனைவி படை வீட்டாருக்கு உரிமை படுத்திக்கொடுத்த சொத்து என்றால் சரிதான். அதற்கு தெற்கு பக்கத்தில் மூக்கமாலுக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் குத்தாலிங்க தேவர் என்றால் சரிதான். அவர் ஆயுள் காலத்தில் சீட்டு வரவு செலவு நடத்தி வந்தார் என்றால் எனக்கு தெரியாது. அவருக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். எனது பாட்டியின் பெயர் அருணாச்சல வடிவம்மாள் அவர் எனது தாத்தாவிற்கு இரண்டாவது மனைவி என்றால் சரிதான். அருணாச்சல வடிவம்மாள் 1997 இல் இறந்துவிட்டார் என்றால் எப்போது இறந்தார் என்று எனக்குத் தெரியாது. குத்தாலிங்க

தேவர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவரது மூத்த மனைவி பெயர் வெள்ளத்தாய் என்றால் சரிதான். அவர்களுக்கு பேச்சிமுத்து தேவர், சுப்பம்மாள் ஆகிய இரண்டு பிள்ளைகள் அவர்களும் இறந்து விட்டார்கள் என்றால் சரிதான். எதிர் வழக்குரைக்கு யார் தகவல் சொன்னது என்றால் நான் தான் விவரம் சொன்னேன் எனது வழக்கில் எனது தாத்தா இறந்த பின்பு வாய்மொழி பாகம் என்று சொல்லி உள்ளதில் அது எந்த வருடம் எப்போது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதில் யார் யாருக்கு என்னென்ன சொத்துக்கள் கொடுத்தார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான் எனது தாத்தா குத்தாலிங்க தேவர் உயிரோடு இருந்த காலத்திலேயே 25.09.1976 தேதியில் ஒரு உயில் எழுதி வைத்தார் என்றால் அது எனக்கு தெரியாது. வாதிகள் பிராதில் என்ன சொல்லி உள்ளார்கள் என்று நான் படித்துப் பார்க்கவில்லை எனக்கு தெரியாது. வாதிகள்.வழக்குரையில் கூறியுள்ளதை நான் படித்து பார்க்காதால் அவர்கள் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்று சரியா தவறா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஒன்னாவது வாதி அவருக்கு பாத்தியப்பட்ட வழக்குரை ஒன்னாவது தபசில் சொத்தை ஒரு ஏற்பாட்டு ஆவணம் 08.09.2015 தேதியில் இரண்டாவது வாதிக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண் 25/ 2 மொத்தம் எவ்வளவு பரப்பளவு என்று எனக்குத் தெரியாது. அந்த சொத்தை பொறுத்து பட்டா ஒன்னாவது வாதி பெயரிலும் அவரது மனைவி பெயரிலும் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் அந்த பட்டாவை தாக்கல் செய்துள்ளார்கள் அதை நான் பார்க்கவில்லை. சர்வே எண் 25/ 2ல் 23 சென்டை பொறுத்து வேறு சொத்துக்களை பொருத்தும் குத்தாலிங்க தேவர் அவரது ஆயுள் காலத்திலேயே அவர் ஆயிலுக்குப் பின்பு அந்த சொத்துக்கள் யாருக்கு செல்ல வேண்டும் என்று கூறி அவரது மனைவியான அருணாச்சல வடிவம்மாளுக்கு ஆயுள் கால பாத்தியத்தையும் அவரது ஆயிலுக்கு பின்னர் அவரது குமாரரான ஒன்னாம் வாதிக்கு முழு பாத்தியதையும் ஏற்படும் வகையில் 25.9.1976 தேதியில் ஒரு பதிவு செய்த உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அந்த உயில் பத்திரம் எனது தாத்தாவின் ஆயுள் காலத்திற்குப் பிறகு நடைமுறைக்கு வந்தது என்றால் எனக்கு தெரியாது. அந்த உயில் ஆவணப்படி அருணாச்சலவடிவம்மாள் ஆயுள் காலத்திற்குப் பிறகு ஒண்ணாவது வாதி கணபதிக்கு பாத்தியப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. அதனால் நான் எதிர்வழக்குரையில் வாய்மொழி பாகப்பிரிவினை என்று சொல்வது பொய் என்றால் சரி இல்லை. எங்கள் ஊரில் மந்திர மூர்த்தி தேவர் குமாரர் சுடலை ஆண்டி தேவர் யாரும் உள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதே போல் பேச்சிதேவர் மகன் முருகையா தெரியும் அவர் இறந்துவிட்டார். முருகையா தேவருக்கு வாரிசுகள் இல்லை எனது மாமா கணபதி ஒண்ணாவது வாதி ஆரம்ப காலத்தில் பால் வியாபாரம் செய்து வந்தார் என்றால்

சரியல்ல. அவர் வழக்குரை மூணாவது தபசீலை மூலக்கூறாக வைத்து தான் மாடுகள் வைத்து பால் வியாபாரம் செய்து வந்தார் என்றால் இல்லை. அவர் பால் வியாபாரம் சரிந்ததால் கேரளாவில் காய்கறி கடை வைத்திருந்தார் என்றால் இல்லை. எங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட வீடு தேன்பொத்தை ஊருக்குள் உள்ளது அதனால் அந்த வீடு பழமை அடைந்து விட்டது அதனை சரி செய்வதற்கு வரும் வரை 3வது தபசில் சொத்தில் ஓலை கூரை சாவடியில் வசித்துக் கொள்வதற்காக ஒண்ணாவது வாதி அனுமதி கேட்டார் என்றால் இல்லை. அந்த அனுமதியின் பெயரில் தான் எனது தாயார் அந்த சொத்தில் குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல. அந்த ஓலை கூரை சாவடி மழை பெய்ததால் பழுதடைந்ததால் அதனை எனது தாயார் குடியிருந்து வரும் வகைக்காக ஒன்னாவது வாதி சீர் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. காய்கறி வியாபாரம் பின்பு வழக்குரை சொத்துக்கள் இருக்கும் ஊரான தேன் பொத்தை ஊருக்கு திரும்பி வந்துவிட்டார் என்றால் சரியல்ல. நாங்கள் ஒன்னாவது வாதி கேரளாவில் இருப்பதை பயன்படுத்திக் கொண்டு மூணாவது தபசீல் கூரைச் சாவடியை ஓட்டு வீடாக மாற்றி இருந்து வந்தோம் என்றால் சரியல்ல. அதனால் ஒண்ணாவது வாதி எனது அம்மாவை காலி செய்து கொடுக்க சொன்னதற்கு ஒப்புக்கொண்டு அதன் பின்பு ஓட்டுக்குறைக்குரிய செலவுகளை கொடுத்தால் காலி செய்வதாக சொன்னார் என்றால் சரியல்ல. அதன் பின்பு வீணாக காலதாமதம் செய்து வந்து எனது பெயருக்கு மோசடியாக 21.11.2014 தேதியில் ஒரு பதிவு ஏற்பாட்டு ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளார் என்றால் சரியல்ல. பல முறை மூன்றாவது தபசில் சொத்தில் எனது தாயாரான ஒன்னாவது பிரதிவாதிக்கு எந்தவித உரிமையும் இல்லாத காரணத்தினால் அவர் எனது பெயருக்கு எழுதிவைத்த ஏற்பாட்டு ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் அதன் அடிப்படையில் எனக்கு வழக்குரை மூணாவது தவசில் சொத்தைப் பொறுத்து எந்தவித உரிமையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. மூணாவது தபசில் சொத்து தவிர மற்ற இடங்கள் எல்லாம் புஞ்சை நிலமாக உள்ளது என்றால் சரிதான். அதில் தென்னை மரம், தேக்கு மரம் உள்ளது என்றால் சரிதான். அதில் அடி மகசலில் உழுது பயிர் செய்து வருகிறார்கள் என்றால் இல்லை. முன்பு செய்தார்கள் அந்த சொத்துகளில் எனக்கு உரிமை இல்லை என்றால் சரிதான் அதனால் வழக்குரை மூன்றாவது தபசில் சொத்தை காலி செய்து அதில் உள்ள கட்டுமானங்களை இடித்து அப்புறப்படுத்தி இரண்டாவது வாதி வாசம் ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர் கோரிக்கை பரிகாரம் சட்டப்படி இல்லாததால் நிராகரிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வழக்குரை மூணாவது தபசில் எனக்கு உரிமை இல்லாததால் நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல வாதிகள் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது நான் எதிர் கோரிக்கையில் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல

**என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.**

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.10.30 17:13:15 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai